# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.4 இந்த ஒளி

**<u>வேத வசனம்</u>:** **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.**

*1 யோவான் 1:9*

**<u>அறிக்கை</u>:** **என்னுடைய பாவங்களை நான் தேவனிடம் அறிக்கையிட்டால் எனக்கு அவருடைய சுத்திகரிப்பும் அவருடைய ஒளியும் கிடைக்கும்**



**<u>சத்தியம்</u>:** இயேசு சொன்னார், “நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்”

### வேத பகுதி: யோவான் 1:1-5

**பாடம்**

**1. இருளிலிருந்து வெளிச்சத்திற்கு:** அற்புதமான கிருபை என்ற பாடலை எழுதியவர் ஜான் நியூட்டன் என்ற ஆங்கிலேயர். இந்தப்பாடலில் அவர் எழுதுகிறார் “அற்புதமான கிருபை இது இனிமையானது, மா பாதகனமாகிய என்னையும் மீட்டது, முன்பு நான் துலைந்து போயிருந்தேன் இப்போதோ காணப்படுகிறேன், முன்போ குருடனாயிருந்தேன் இப்போதோ காண்கிறேன்”. ஜான் நியூட்டன் மிகப் பாதகனாக வாழ்ந்தவர். கடல் பயணத்தின்போது புயலில் சிக்கி மரிக்கும் தருவாயில் கர்த்தரால் பிடிக்கப்பட்டவர். தொடர்ந்து அவருடைய வாழ்க்கை அற்புதமாக மாறியது. கடுமையான அடிமை வியாபாரியாக இருந்தவர் தேவனுடைய ஊழியனாக மாறினார். மாறியபின் தன்னுடைய இறுதியான 43 வருடங்களும் சிறந்த பண்டிதராகவும், ஆசிரியராகவும், இயேசுவின் நற்செய்தியைப் போதிக்கும் போதகராகவும் வாழ்ந்தார். இயேசு சொன்னார், “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்” தேவன் நம்மையும் ஜான் நியூட்டனைப்போல இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். நாம் பாவ வாழ்வின் உள்ள இருளிலில் இருந்து வெளியே வந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவேண்டும் என்று விரும்புகிறார். (அப். 26:18, யோவான் 8:12)

**2. ஒளியின் பிள்ளைகளாக மாறுதல்:** தேவனை விசுவாசிப்பவர்களை “தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” என்று வேதம் சொல்லுகிறது. தேவனை விசுவாசிக்கிறவர்களுக்கு ஒளியின் வாழ்வு உண்டு. கடுமையான பிரச்சனையின் நடுவில் ஜான் நியூட்டனின் இருதயத்தில் தேவனுடைய ஒளியின் வார்த்தை வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளுவதாலேயே கிறிஸ்தவர்கள் பிறரிடமிருந்து வேறுபடுகிறார்கள்.

**3. நன்மைகளை மட்டும் பார்த்தல்:** வேதபுத்தகம் சொல்லுவது, “கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.”. நீ பார்க்கிறவைகள் பரிசுத்தமானவைகள் இல்லை எனில் அவை உன்னை வெளிச்சத்திலிருந்து வெளியேற்றி இருளுக்குள் தள்ளிவிடும். ஆகையால் நான் பார்க்கிறவைகளைக்குறித்து கவனமாக இருக்கவேண்டும். (லூக்கா 11:34)

**4. பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்தல்:** மனிதன் தேவனிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கைச் செய்து அவரால் கழுவப்படவில்லை எனில், அவன் இருளில் வாழுவான். அவனுடைய இருதயம் துன்பங்களை எதிர்கொள்ளும். ஆகையால் மனிதனின் இருதயத்தில் பாவம் தொற்றும்போது அவன் அதை தேவனிடம் அறிக்கைச் செய்ய வேண்டும். ஜான் நியூட்டன் தன் பாவங்களை தேவனிடம் அறிக்கைச்செய்யும்போது அவர் பாவ மன்னிப்பையும் வெளிச்சத்தையும் பெற்றுக்கொண்டார். “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” (மத்தேயு 5:8)

**<u>முடிவுரை</u>:** ஜான் நியூட்டனின் வாழ்க்கை சிறுவர்கள், வாலிபர்கள் போன்ற அநேகருடைய வாழ்வில் ஒளியைக் கொண்டு வந்தது. நாம் அவரைப் போல, இருளை விட்டு வெளியே வந்து தேவனுடைய பிள்ளைகளாக மாறி, தேவனுடைய ஆசீர்வாதத்தையும் வழிகாட்டுதலையும் பெற்றுக்கொள்ளும்படியான வாழ்க்கை வாழ வேண்டும்.

**<u>ஜெபம் / அழைப்பு</u>:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.